கானா நாட்டின் தலைநகர் அக்ராவில் 66வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழ்நாடு கிளையின் பிரதிநிதியாக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கலந்து கொண்டார். மாநாட்டில் இந்திய வட்டாரப் பிரதிநிதிகளின் செயலாள ராக தமிழ்நாடு சட்டமன்றச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் பங்கேற்றார்.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா "உடன் பிறப்பின் உயிர்த்துடிப்பு கலைஞர் எனும் தலைப்பில் நம்மாழ்வார் பேட்டை சின்னபாபு தெரு (ஐந்து விளக்கு அருகில்) சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்துசமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இக்கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், சரிதாமகேஷ்குமார், ரமணிலோகேஷ், நா.துலுக்காணம், பி.சுகுமார், வனஜாசண்முகம் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 75 வது வட்ட கழக செயலாளர் வீ.க.வெங்கடேசன் நன்றி கூறினார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!

## ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், அக். 04-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் உள்ள ஆர்.எம்.கே கெஸ்ட் ஹௌசில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமை வகித்தார். மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ண சாமி எம்.எல்.ஏ தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே. ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர்அணிதுணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் எஸ். ஜெயபாலன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் .

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசிய தாவது:-

பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் தினந்தோறும் 1 மணி நேரம் ஒதுக்கி தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களை சந்திக்க வேண்டும்.

பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் "மக்களுடன் ஸ்டாலின்" செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களை சந்தித்து "மக்களுடன் ஸ்டாலின்" செயலியில் உள்ள திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை எடுத்துக்கூற வேண்டும்.

தொகுதி பொறுப்பாளர்கள் வாரந்தோறும் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்களை சந்தித்து அவர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

சென்னையில் மகளிர் உரிமை மாநாடு அக்டோபர் 14-ஆம் தேதி சென்னையில் நடைபெறுகிறது. மகளிர் உரிமை மாநாட்டில் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள். சேர்மன்கள், வார்டு உறுப்பினர்கள், கழகம் மற்றும் கழக அணிகளில் பொறுப்பில் உள்ள மகளிர் கட்டாயமாக திருவள்ளூர் மத்திய மாவட்ட சார்பில் கலந்து கொள்ள வேண்டும். கழக இளைஞர் அணி சார்பில் சேலத்தில் டிசம்பர் 17-ஆம் தேதி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட் டில் திருவள்ளூர் மத்திய மாவட்டம் சார்பில் 3,500 மேற்பட்டோர் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் நடைபெறவுள்ளதால் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் கழகத்தினரை அதிக அளவில் உறுப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நவம்பர் 04, 05, 18, 19 ஆகிய பெயர் சேர்த்தல், நீக்கல், வாக்காளர் பட்டியல் பெயர் சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் .

2024 நாடாளுமன்ற தேர்தலையொட்டி தலைமை கழகம் அறிவிக்கும் வேட்பாளரை திருவள்ளூர் மத்திய மாவட்ட சார்பில் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி ஆகிய இடங்களில் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணிக்காக தேர்தல் பிரச்சாரத்தை மேற் கொண்டு அதற்கான பணிகளை உடனடியாக செய்திட வேண்டும்.

கிளைதோறும் தி.மு.க. இளைஞரணி பாகவாரியாக உறுப்பினர் சேர்க்கை பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும்.

பள்ளி குழந்தைகளுக்கு அரசு பள்ளியில் காலை சிற்றுண்டி வழங்கிய தாய் உள்ளம் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கு தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்கு மகளிர் உரிமை ஆயிரம் ரூபாய் வழங்கியதற்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் தொகுதி பார்வையாளர்கள் ஆர்.டி.இ. ஆதிசேசன், பழ.கணேசன், மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் சன்பிரகாஷ், புஜ்ஜி டி.ராம கிருஷ்ணன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபி சேகர், ஜோதிலட்சுமி, பரமேஸ்வரி கந்தன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ்குமார், வி. தியாகராஜன், ஜி.எஸ்.சங்கீதா, ஏ.ஜெ.பவுல், கு.தமிழ்செல்வி, பெ.வினோத், ஒ.ஆர். நாகூர்கனி, டாக்டர் க. ராஜேஷ் குமார், பொறியாளர் எம்.மோகன், எஸ்.சௌந்தரராஜன், எம்.இளையான், பிரவீன்குமார், த.குமரேசன், தணிகாசலம், சண்முகம், ப.குமரேசன், ஷாஜகான், ஆதிகேசவன், ஜாக்கப், பாக்கம் கருணாகரன், ஜி.சி.சி.கருணாநிதி, உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார் உள்பட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

மா.சுப்பிரமணியன் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா - க.தனசேகரன் - ஜி.ஸ்டாலின் பங்கேற்பு!

# கலைஞர் நகர் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மு.இராசா எம்.சி. அறிக்கை!

சென்னை, அக். 4

கலைஞர்நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் மு.இராசா எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் வடக்கு பகுதிக் கழக வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் எனது (பகுதிக் கழகச் செயலாளர் மு.இராசா எம்.சி) தலைமையில் இன்று (4.10.2023 புதன்கிழமை) காலை 10 மணிக்கு, ஆற்காட் சாலையில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, ஜி.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே கலைஞர்நகர் வடக்கு பகுதிக்குட்பட்ட வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கலைஞர்நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் மு.இராசா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. வழக்கறிஞர் அணி

## திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் தலைவர் துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், வருகிற 7.10.2023 (சனிக்கிழமை), காலை 10.30 மணியளவில் திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழக அலுவலகம் தெற்கு பைபாஸ் சாலை வண்ணாரப்பேட்டை என்ற முகவரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆகிய துணை அமைப்பாளர்கள் தலைவர் துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்
சென்னை18.
நாள் 3.10.2023.

**என்.ஆர். இளங்கோ,எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் பேரூர் கழகம் சார்பில் 2 .10 .2023 திங்கட்கிழமையன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் திருப்போரூர் பேரூர் கழக செயலாளர் மு.தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத் பாலா சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் முன்னாள் எம்எல்ஏ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.விஜயகுமார், பேரூர் கழக நிர்வாகிகள் எஸ்.அஸ்கர் அலி, வி. சந்திரன், ஆர்.பரசுராமன், கி.கே.பாலசுப்பிரமணியம், எஸ்.சசிகலா, டி.செங்குட்டுவன், ஆர்.பவித்ரா, எஸ்.பாஸ்கர், பி.சாமுவேல், என்.மேகலாதேவி, பி.சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் அறிக்கை!

திருவள்ளூர், அக். 4 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி குறித்து கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழகத் தலைவர் முதமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, வருகின்ற 01.01.2024 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை, தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது. மேலும் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் 27.10.2023 வெள்ளி முதல் 09.12.2023 சனிக்கிழமை வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர வருகின்ற 04.11.2023, 05.11.2023, 18.11.2023 மற்றும் 19.11.2023 ஆகிய 4 நாட்கள் அந்தந்த பகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் , வாக்காளர் சிறப்பு முகாம் காலை 9:30 முதல் மாலை 5:30 வரை நடைபெற உள்ளது.

அதனடிப்படையில் இதில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்யவோ / திருத்தங்கள் செய்யவோ / இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர் / தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள்6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம். மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்ய www.nvsp.in என்ற இணையதளம் மூலமாகவும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யலாம்

மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகர மன்ற, பேருராட்சி மன்ற, ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள், (BLA 2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு : வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக உடன் இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு மாவட்ட செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நடுக்குத்தை ஊராட்சியில் 02.10.2023 அன்று அண்ணல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து ஊராட்சிக்கு தேவையான அடிப்படை வசதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்து நடவடிக்கை மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், ம.இராஜி, எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் என்.லட்சுமி, ஒன்றிய கவுன்சிலர் யமுனா ரமேஷ், மருத்துவ துறை இணை இயக்குனர் செந்தில்குமார், வட்டர வளர்ச்சி அலுவலர் ஸ்டாலின், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், மற்றும் பொறியாளர் எம்.மோகன், வழக்கறிஞர் பெ.வினோத், நெமிலி சுரேஷ் குமார், ஜி.சி.சி.கருணாநிதி, மா.செ.அக்னி ராஜேஷ், எம்.குணசேகரன், பா.கந்தன், பி.எல்.ஆர்.யோகா. வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் வெள்ளத்துரை அவர்கள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்
## அக்டோபர் 4 (2014)

வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.

தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.